

# மகாலட்சுமி தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "



தோற்றம்
27.10.1942

மறைவு
20.05.2015

அமரர்

# திருமதி நவரத்தினம் மகாலட்சுமி

அவர்கள்

## நீதி வெண்பா

ஆண்டு மன்மதவின் வையம் மகிழ் வைகாசித்திங்களில்
பூண்ட பூர்வ பக்கத் துதியை தனிலே - மாண்புமிகு
மகாலட்சுமி மண்வாழ்வு மாயமென
மயூரனடி சேர்ந்தார் சிறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# நவரத்தினம் மகாலட்சுமி

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 18.06.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்
மனிதருள் மாணிக்கமாய் அன்பு நிறைந்த
பேரொளியாய் இன்சொல் பேசி
அன்புடன் எம்மைப் பேணிக்காத்து, அனைவருடனும்
பாசத்துடனும் நேசத்துடனும், இறக்கும் வரை
இன்முகத்தினளாய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானைறையும்
தெய்வமாகிவிட்ட எமது
அன்புத் தாயின்
திருப்பாதங்களுக்கு இம்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
*சிவமயம்*

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்நோப சாந்தயே.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளு வதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க" என்றார்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணி
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்றொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாலட்சுமி நவரத்தினம்

அவர்களின்

# வாழ்நாள் நினைவுகளில் சில துளிகள்

இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை நன்நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் செல்வம் கொளிக்கும் கொக்குவில் பதியில் **1942**ஆம் ஆண்டு உயர் சைவ வேளாளர் மரபில் வந்த கந்தையா செல்லம் தம்பதியினருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. திருமகளே தமது வீட்டிற்கு வந்திருப்பதாக எண்ணிய பெற்றோர் அக் குழந்தைக்கு மகாலட்சுமி என நாமமிட்டு மகிழ்ந்தனர்.

லட்சுமி கடாட்சமே உருவான அக்குழந்தை ஆரம்பக் கல்வியை ஞானபண்டித வித்தியாலசாலையிலும் மேற்படிப்பை முத்துத்தம்பி மாகவித்தியாலயத்திலும் பயின்றவர். அக்காலத்து S.S.C வரை படித்தவர். திருமண வயதை அடைந்த பின் பெற்றோர்கள் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா நவரத்தினம் என்பவருடன் திருமண பந்தத்தை ஏற்படுத்தி வைத்தனர். செல்லப்பா நவரத்தினம் ஒரு பிரசித்தி பெற்ற பட வரைஞர். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் தமது ஆரம்பப் படிப்பை மேற்கொண்டவர். பின் மொறட்டுவ உயர் தொழி நுட்பக் கல்லூரியில் பட வரைகலையைக் கற்றவர். **1971**ஆம் ஆண்டில் மங்கை நல்லாள் மகாலட்சுமியை மணம் முடித்தார்.

மகாலட்சுமி நான்கு ஆண்சகோதரர்களுக்கு ஒரு பெண் சகோதரி. பெற்றோருக்கு இவர் இரண்டாவது பிள்ளை. மிகவும் செல்லமாக வளர்ந்தவர். இவரின் அருள் ஒழுகும் முகமும், இன் சொல்லும், எளிமையும், பணிவும், சுற்றத்தாரை அணைத்துச் செல்லும் பாங்கும், மனை மாட்சியும் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமையையும் புகழையும் ஈட்டித் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கணமும் மணியர்பதி முருகனை மறவாத மகாலட்சுமி அம்மையாரின் இல்லற வாழ்வு நல்லறமாகவே அமைந்தது. இந் நல்லறத்தின் பயனாக தயாளினி எனும் மகளையும், சுதர்சன் எனும் மகனையும் பெற்றெடுத்தார்.

பிள்ளைகள் பண்பாளர்களாக மட்டுமன்றி படிப்பறிவிலும் சிறந்து விளங்கவேண்டும் என எண்ணி மகளை வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி பயில வைத்தார். தயாளினி மாநகரசபை நூலகத்தில் நூலகராகக் கடமையாற்றி தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து வருகின்றார். மகன் சுதர்சனன் சென்ஜோன்ஸ் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். இன்று லண்டனில் I.B.C வானொலியில் அறிவிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார். பிள்ளைகளை நல்லபடி வாழவைத்த மகாலட்சுமி அம்மையாருக்கு சத்தியலட்சுமி, செந்தூரிஜா எனும் இரு பேரப்பிள்ளைகளும் உண்டு.

கணவனே கண்கண்ட தெய்வம் என வாழ்ந்தவர். குடும்பக் கௌரவத்தைப் பெரிதாக மதித்தவர். சென்ற இடமெல்லாம் புகழுடனும் பெருமையுடனும் வாழ்ந்தவர். இப் பூவுலக நியதிப்படி **20.05.2015** இல் தனது வாழ்க்கைப் பயணத்தை நிறைவு செய்து மணியர்பதி முருகன் திருவடியில் நித்தியப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபதேச மொழிகள்

## கடவுள் – God

இராத்திரியில் ஆகாயத்தில் அநேக நட்சத்திரங்களைக் காண்கிறாய். ஆனால் சூரியோதயமானதும் அவைகள் தென்படுவதில்லை. ஆதலால் பகற்போதில் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லையென்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞான காலத்தில் நீ ஈசுவரனைக் காண முடியாததனால் ஈசுவரனே இல்லையென்று சாதிக்காதே.

**- ஸ்ரீ இராமகிருஸ்ணர்**

## ஈசுவர தோற்றம் – Divine Manifestation

நெருப்புக்கு அதற்கென்றே ஒரு ஸ்திரமான உருவம் இல்லை. ஆனால் சுடர் விட்டு எரியும் போது அதற்கு வெவ்வேறு ரூபங்கள் உண்டாகின்றன. ஆதலால் நிராகர நெருப்புக்கு ரூபங்கள் தோன்றுகின்றன. அதைப்போலவே நிராகாரனான இசுவரன் சிற்சில வேளைகளில் ஏதேனுமொரு ரூபத்தை எடுக்கின்றான்.

**- ஸ்ரீ இராமகிருஸ்ணர்**

## சர்வ வியாபகர் – Omnipresent God

கடிக்கும் பாம்பும் அக்கடியைக் குணப்படுத்தும் வைத்தியனும் நானே. தண்டனை விதிக்கும் நியாயாதிபதியும் அத்தண்டனையை நிறைவேற்றும் வேலைக்காரனும் நானே என்று ஈசுவரன் சொல்லுகிறான்.

**- ஸ்ரீ இராமகிருஸ்ணர்**

## மாயை – Ignorance Maya

மேகம் சூரியனை மறைப்பது போல மாயையும் ஈசுவரனை மறைக்கின்றது. மேகம் அப்பால் அகன்றுபோனதும் சூரியன் காணப்படுகிறது. அதுபோல மாயை அகன்றதும் ஈசுவரன் கண்ணுக்குத் தென்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசுர பக்தி – Piety

வெறுங் கண்ணாடியில் யாதொரு உருவமும் பதிவதில்லை. ஆனால் தகுந்த வஸ்துக்களை அக்கண்ணாடியின் மேல் பூசிய பிறகு படங்களை எழுதலாம். அது போல பக்தியாகிய வஸ்துவை மானிட இதயத்தின் மீது தடவினால் அங்கு ஈசுவரனுடைய ரூபத்தைப் பதியச் செய்யலாம்.

*****

காரணமின்றியும் ஈசுவரனிடம் பக்தி கொள்வதென்பது ஒன்றுண்டு. இந்த நிலையை அடைந்துவிட்டால் அப்பால் விரும் பிப் பெறக்கூடிய பொருள் ஒன்றுமே இராது. அப்படிப்பட்ட பக்தியுடை யவன் ஈசுவரனே! எனக்குச் செல்வம் வேண்டாம், புகழ் வேண்டாம், ஆரோக்கியம் வேண்டாம், சந்தோசம் முதலிய மற்றெதுவும் வேண் டாம், உனது பாதாரவிந்தங்களில் கலப்பற்ற பக்தி மட்டும் இருக்கும் படி கிருபை புரிய வேண்டும் என்பான்.

## பக்தி வகை – Stages of Piety

பக்தி, வைதிக பக்தி என்றும் ராகபக்தி என்றும் இரு வகைப் படும் வைதிக பக்தி என்பது சாஸ்திரங்கள் விதிக்கிறபடி பக்தி பண்ணுதலாம் பகவந்நாமத்தைப் பலதடவை உச்சாரணம் பண்ணு தல், உபவாச மிருத்தல், தீர்த்தயாத்திரை போதல், வேண்டிய சாமக்கிரியைகளைக் கொண்டு பூசை செய்தல் முதலியன. இப்படி நெடுங்காலம் பக்தி செய்தால் ஈசுவர பக்தியில் இன்னும் உயர்ந்த நிலைமையான ராகபக்தியைப் பெறக் கூடும். எல்லாவற்றிற்கும் ப்ரேமை தான் முக்கியம். உலகப்பற்று முற்றிலும் அகலவேண்டும். அப்போதுதான் அவனை அடைய முடியும். ராகபக்தி அவனை அடைய முடியாது.

## ஈசுவரப் பிரமை – Devotion of God

மாயையின் கைகளினின்றும் விடுபடுவதற்கு நாம் செய்ய வேண்டிய உபாயங்கள் எவை? அதன் கைகளினின்றும் விடுபட வேண்டுமென்ற ஆவலுள்ளவனுக்கு ஈசுவரனே வழியைக் காட்டி அருள்கிறான். இடைவிடாத ஆவல்தான் அவசியமானது, ஈசுவர னைப் பற்றி சதா ஆவலுடன் சிந்திப்பவனுக்கு பானம், ஆகாரம் முதலிய விடயங்களில் மனம் செல்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசுவர வைராக்கியம் – Devine zeal

இயேசு கிறிஸ்து ஒருநாள் கடற்கரை ஓரமாய் உலவிக் கொண்டி ருக்கும் போது ஒரு பக்தன் அவரிடம் வந்து, கர்த்தரே! ஈசுவரனை ஒருவன் எப்படி அடையக் கூடும்? என்று கேட்டான். இயேசுகிறிஸ்து அப்படிக் கேட்டவனோடு சமுத்திரத்தில் இறங்கி அவனைத் தண்ணீரில் அமிழ்த்தினார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவனை விடுவித்துக் கைகளைப் பிடித்துத் தூக்கி உனக்கு உப்படி இருந்தது? என்றார். பக்தன், எனது ஸ்திதி வெகு பரிதாபமாக இருந்தது. எனக்கு அந்திய காலமே வந்துவிட்டதுபோலத் தோன்றியது என்று பதில் சொன்னார். இதைக் கேட்ட இயேசு கிறிஸ்து இப்போது தண்ணீருக்குள் இருக்கும்போது மூச்சு விடுவதற்கு உனக்கு இருந்த ஆவலைப் போன்ற ஆவல் ஈசுவர னைக் காணவேண்டியதற்கு இருக்குமானால் நீ இசுவரனை நிச்சய மாகத் தரிசிப்பாய் என்றார்.

* * * * *

இவ்வுலகத்திலிருக்கையில் நீ என்ன செய்ய வேண்டும்? எல்லா வற்றையும் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்துவிடு. நீயும் அவனைச் சரணமடை. அப்பால் உனக்குத் துன்பமே இராது. எல்லாக் காரியங் களும் அவனுடைய ஆஞ்ஞைப் பிரகாரமே நடக்கின்ற தென்பதை நீ தெரிந்து கொள்வாய்.

* * * * *

உனது சம்சார விடயங்களெல்லாம் உன்னுடைய அல்ல என்றும், அவை ஈசுவரனுடையவை என்றும், நீ அவனுடைய கட்டளைப்படி நடக்க வேண்டிய தாசனென்றும் எப்போதும் நினைத்துக் கொண்டிரு. இந்த அபிப்பிராயம் உன் மனத்தில் நிலைத்துப் போகும்போது எனது என்று சொல்லக் கூடிய பொருள் ஒன்றுமே உனக்கு இராது.

* * * * *

எண்ணெய் ஊறிய கடதாசியில் ஒன்றும் எழுத முடியாது, அதுபோல தீமையும் பெருமித வாழ்க்கையுமாகிற எண்ணெய்ப் பசையால் கெட்டுப்போன ஆன்மா ஆத்மா பக்திக்கு உதவாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய்க் கடதாசியின் மீது சுண்ணாம்புப் பொடியைப் பரப்பினால் அது எழுதுவதற்கு உபயோகப்படும். அதுபோல வைராக்கியம் என்னும் சுண்ணாம்புப் பொடியை ஆத்மாவின் மீது பரப்பினால் அது மறுபடியும் ஆத்மாபிவிருத்திக்கு உபயோகமாகும்.

* * * * *

## ஈசுவர விசுவாசம் – Divine Faith

கல்லானது தண்ணீரில் அநேக வருடங்கள் கிடந்தாலும் அத்தண்ணீர் அதனுள் நுழையாது ஆனால் களிமண்ணோ ஜலசம்பந்தத் தால் வெகு சீக்கிரத்தில், மிருதுவாகி விடுகிறது. அதுபோல பக்தனுடைய திடமான மனம் இம்சையாலும் சோதனையாலும் தடுமாற்றம் அடைவதில்லை. திடபக்தியில்லாதவனுடைய மனமோ வெகு அற்பமான காரணத்தைக் கொண்டும் சலனமடையும்.

சிக்கிமுக்கிக்கல் கற்பகோடி காலம் வரையிலும் தண்ணீரில் கிடந்தாலும் தன் உள் நெருப்பை ஒருபோதும் இழப்பதில்லை. எப்போது வேண்டுமானாலும் சரி அதை இரும்பால் தட்டினால் நெருப்புப்பொறி பறக்கும். அதுபோலத்தான் திடசித்தமுள்ள பக்தனும் அவன் உலக பாசங்களிடையே கலந்திருந்தாலும் அவனுடைய பக்தியும் ப்ரேமையும் குறைவுடா. ஈசுவரனுடைய நாமத்தைக் கேட்ட மாத்திரத்திலயே அவன் தன்னை மறந்தவனாய் விடுகிறான்.

## விக்கிரகாராதனை – Image worship

முதன் முதலில் பெரிய எழுத்துக்களை எழுதத் தெரிந்து கொண்ட பிறகு சிறிய எழுத்துக்களை எழுத ஒருவன் கற்றுக் கொள்வதைப் போல உருவமுள்ள வஸ்துவின் மீது மனத்தைச் செலுத்தி ஏகாக்கிரசக்தியை ஒருவன் அடைய வேண்டும். அதில் அவனுக்கு அனுபவம் உண்டான பிறகு உருவமற்ற வஸ்துவினிடம் மனத்தை சுலபமாகச் செலுத்தலாம்.

* * * * *

குறிபார்த்துச் சுவடுபவன் முதலில் பெரிய பொருள்களைக் குறியாகக் கொண்டு சுடக் கற்றுக் கொள்ளுகிறான். அனுபவம் பெறப் பெற சிறுகுறிகளை நோக்கிச் சுடுகிறான். அதுபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவமுள்ள விக்கிரகத்தினிடம் மனம் நிற்கும் படியான பயிற்சி உண்டான பிறகு உருவமே இராத வஸ்துவிடம் அது நிலைத் திருப்பது சுலபமாகும்.

* * * * *

பசுவினிடமுள்ள பாலானது வாஸ்தவத்தில் அதின் சரீர முழுவ திலும் இரத்தரூபமாய்ப் பரவியுள்ளது. என்றாலும் அப்பசு வின் காதுகளையோ கொம்புகளையோ பிசைந்தால் பால் வராது அதற்கு அதன் முலைக்காம்புகளைப் பிடித்துக் கறக்க வேண்டும். அதுபோல் ஈசுவரன் இவ்வுலகத்தில் எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறான். ஆயினும் எல்லாவிடத்தும் அவனை உன்னால் காணமுடியாது. பூர்வ பக்தர்களுடைய குணவிசேடம் நிரம்பிய புண்ணிய ஸ்தலங்களாகிய கோவில்களில் அவன் சுலபமாகத் தென்படுகிறான்.

## நிலையாமை – Transitoriness

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போது அவளொடு போம்.

**- மூதுரை**

தழுவிய இனிய உறவும், மேலாகிய பொருளும் நல்ல அழகும், உயர்வாகிய குலமும், என்னும் இவைகளெல்லாம் சீதேவி வந்து கூடும் பொழுது அவளுடனே வந்துகூடும், அவள் நீங்கிப் போம்பொழுது அவளுடனே நீங்கிப் போகும்.

ஊருஞ்சதமல்ல உற்றார்சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேயத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங் கச்சி யேகம்பனே

**- பட்டினத்தடிகள்**

ஊரும் நிலையல்ல, உறவினரும் நிலையல்ல, பல வகையாக விரதங் காத்தல் முதலிய துன்பங்களை அடைந்து பெற்றோர்களாகிய தாய் தந்தையரும் நிலையல்ல, மாதர்களும் நிலையல்ல, மக்களும் சிறப்பும் நிலையல்ல, ஐசுவரியமும் நிலையல்ல, நாட்டிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரும் நிலையல்ல, கச்சியேகம்பனே? உன்திருவடியே நிலையுடைய பொருள்.

## செல்வ நிலையாமை – Transitoriness of Wealth.

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்லமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

**- நாலடியார்**

அறுவகை ருசிகளுடைய உணவை அன்போடு பொருத்தி மனைவி எடுத்தெடுத்து உண்பிக்க மற்றொரு கவளத்தை வேண்டாவென்று தள்ளிப் புசித்த பெருஞ் செல்வமுடையோரும், அச்செல்வமழிந்து தரித்திரர்களாய் வேறொரிடத்தில் போய்க் கூழைப் பிச்சை எடுப்பார்களென்றால், செல்வம் நிலையாயுள்ளதாக வைத்து எண்ணத்தக்க தன்மையுடையதன்று.

தெய்வச் சிதம்பரதேவா
வுன்சித்தந் திரும்பிவிட்டால்
பொய்வைத்த சொற்பன மாமன்னர்
வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வ மெங்கே
மண்ட லீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடகசாலை யெங்கே
யிது கண்மயக்கே.

**- பட்டினத்தடிகள்**

தெய்விகமான சிதாகாசத்தில் நடிக்கின்ற கடவுளே! உன் திருவுள்ளம் மாறுபடின் பொய்த்தன்மையுள்ள கனாவை நிகர்த்த அரசரது வாழ்க் கையும் பூமியும் எங்கே? மேய்த்ன்மையமைத்து வைக்கப்பட்ட செல்வம் எங்கே மண்டலாதிபதிகளுடைய மேடை எங்கே? ஒப்பனை யமைந்த நாடகசாலையெங்கே? இதுவெல்லாம் கண்மயக்கமேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறிடு மேடு மடுவும்போல லாஞ்செல்வ
மாறிடு மேறிடு மாநிலத்தீர்- சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
வுண்ணீர்மை வீறுமுயர்ந்து. **- நல்வழி**

பெரிய பூமியில் உள்ளவர்களே! ஆற்றுவெள்ளத்தினால் உண்டாக்கப்படும் மேடும் பள்ளமும் போல் செல்வம் வளர்வதும் தேய்வதுமாய் இருக்கும். ஆதலினால் நிலையில்லாத செல்வம் உள்ள பொழுதே இரப்பவர்களுக்கு அன்னபானீயங்களைக் கொடுக்கிற சித்த சுத்தியுண்டாகும்.

நில்லாதவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. **- குறள்**

நிலையில்லாத செல்வத்தை நிலையுடையது என்று நினைக்கின்ற அற்ப புத்தியையுடையவராயிருக்கை இழிவு.

அற்கா இயல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
அற்குப ஆங்கே செயல்.

செல்வமானது நிலையத இயல்பை உடையதாகும். அச்செல்வத்தைப் பெற்றால் அதனாலே செய்யப்படும் அறங்களைப் பெற்ற பொழுதே செய்யக்கடவன்.

## இளமை நிலையாமை – Transitoriness of Youth

நட்புறா ரற்றன நல்லாரு மஃகினா
ரற்புத் தளையு மவிழ்ந்தன - வுட்கணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
யாழ்கலத் தன்ன கலுழ்.

**- நாலடியார்**

சினேகங்களாகிய பாசங்கள் உனது நண்பர்க்கு உன்னிடத்து அற்றுப் போயின. உன்னில் அன்பு கொண்ட மாதர்களும் அன்பு குறைந்தார்கள். உன் சுற்றத்தார்க்கு உன்னிடத்திலிருந்த அன்புகளாகிய கட்டுக்களும் தளர்ந்து போயின. மனத்திலே ஊன்றி ஆலோசித்துப்பார். இளமையைப் பொருளென மதித்து மகிழ்ந்து வாழ்ந்ததனால் என்னபயன் உண்டாயிற்று. கடலில் மூழ்கின்ற மரக்கலத்திலுள்ள வர்க்கு வந்தது போன்ற துன்பம் வந்துவிட்டதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளமை நிலையாமை – Transitoriness of Youth

பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்நதற் றிளமை - நனிபெரிதுங்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
கோற்கண்ண ளாகுங் குனிந்து.

- நாலடியார்

இளமைப்பருவமானது குளிர்ச்சி பொருந்திய சோலையிலுள்ள பலன்படுகிற மரங்களெல்லாம் பழங்கள் உதிர்ந்து விழப்பெற்றாற் போன்ற நிலையில்லாத தன்மையையுடையது. ஆதலால் இப் பொழுது வேல் போற் கூர்மையான கண்களையுடையவளென்று எண்ணி இவளை (இளமைப்பருவத்தை) மிகவும் அதிகமாக விரும்பாதீர்கள். இவளும் பின்பு குனிந்து உடம்பு கூனடைந்து வழிதெரிந்து நடப்பதற்கு ஊன்று கோலையே கண்ணாக உடைய வளாவாள்.

## யாக்கை நிலையாமை – Transitorniess of body

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவது கண்டுபின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவ
ரடிசார்ந்து நாமுள்ள வேண்டுமென்றே அறிவாரில்லையே.

- பட்டினத்தடிகள்

முடிபொறுத்த வேந்தரும் மற்றுமுள்ளோரும் முடிவுகாலத்தில் ஒருபிடி சாம்பலாக வெந்து மண்ணாவதையும் பார்த்துமேலுமிந்த பிரபஞ்சத்தைச் சேர்ந்த நிலையற்ற வாழ்க்கையை எண்ணுவதே யன்றி பொன்னம்பலவாணரது திருவடிகளைச் சரணடைந்து நாம்பிழைக்க வேண்டுமென்று உணர்வோர் இவ்வுலகத்தில் இல்லை.

எரியெனக்கென்னும் புழுவோ வெனக்கென்னுமிந்த மண்ணும்
சரியெனக்கென்றும் பருந்தோ வெனக்கென்னுந் தான்புசிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரியெனக் கென்னும் புள்ளா யெனக்கென்னு மிந்நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தே னிதனாலென்ன பேறெனக்கே.

**- பட்டினத்தடிகள்**

தீ தனக்குரியது என்றும், புழு தனக்குரியதென்றும், இந்த பூமியும் தனக்கு ஒத்ததென்றும், பருந்தோ தனக்குரிய தென்றும், தான் உண்ணுகிறதற்கு நரி தனக்குரியதென்றும், இழிந்த நாய் தனக்குரிய தென்றும், கருதுகின்ற இப்படிப்பட்ட நாறுகின்ற உடலை இடத்தோடு காப்பாற்றினேன். இதனால் எனக்கு என்ன பயன்?

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை - திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு.

**- நன்னெறி**

திருந்திய ஆபரணத்தை யுடையவளே வருந்துகின்ற உயிரானது ஒன்பது துவாரங்களையுடைய உடம்பிலே தங்குதலே ஆச்சரியம். நீங்குதல் ஆச்சரியமன்று. குளிர்ச்சியாகிய நீரானது பொள்ளல் களையுடைய சிறிய குடத்திலே நில்லாது ஒழுகிப் போதலோ நிற்றலோ ஆச்சரியமாகும்.

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட்டா ரல்லா
லெஞ்சினா ரிவ்வுலகத் தில்.

**- நாலடியார்**

மலையின் மேல் காணப்படுகின்ற பூரண சந்திரன் போல் பட்டத்து யானையினது தலையின் மேல் கொள்ளப்பட்ட வெண்கொற்றக் குடையையுடையராய்ச் சென்ற அரசர்களும் இப் பூமியிலே இறந்தார்களென்று பிறர் அறிய எடுத்துச் சொல்லிப் பலராலும் இழக்கப்பட்டார்களே யல்லாமல் அவ்விறத்திலினின்று ஒழிந்து நிலையாக நின்றவர்கள் இந்த உலகத்தில் எவரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடக்கமுடைமை – Self Restraint.

எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளஞ்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

**- குறள்**

பெருமைப் பாடில்லாத அடங்குதல் யாவருக்கும் நன்றாகும். ஆயினும் அவருள்ளும் செல்வருக்கே வேறு ஒரு செல்வமாய்த் தோன்றுஞ் சிறப்பினையுடையதாம்.

தீயினாற் சுட்ட புண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

ஒருவனை யொருவன் நெருப்பால் சுட்ட புண்ணானது உடம்பினிடத்தேயிருந்தாலும் மனத்தினிடத்தே அப்பொழுதே ஆறும். அப்படி யல்லாமல் தீயசொற்களையுடைய நாவினாலே சுட்ட வடுவானது எப்பொழுதும் ஆறாது.

அடக்க முடையா ரறிவில ரென்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாயி யிருக்குமாங் கொக்கு

**- மூதுரை**

நீர் மடையினிடத்து ஓடும் சிறு மீன்கள் எல்லாம் ஓடவிட்டுப் பெருமீன் வரும் வரையும் கொக்கானது அடங்கி இருக்கம். அதுபோல அடங்கி இருக்கும் குணமுடையவரை அறிவில்லாதவரென்று கருதி வெல்ல நினைப்பவனுக்குத் தப்பாது கேடுவரும்.

## பொறை – Patience

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரை தான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

**- நன்நெறி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவருகின்ற வெள்ளத்தைத் தடுத்தல் அரிது. அதை விடுத்தல் அரிதல்ல. அதுபோல் கோபத்தைச் செய்தல் எளிது. அடக்கல் அரிது. அரியதைச் செய்தலே பெருமை.

கற்பிளவோடு ஒப்படர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பரும் போல்வாரே - விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

**- மூதுரை**

கீழோர் கடுங்கோபத்தினால் வேறுபட்டால் கல்லினுடைய பிளவு களைப் போல திரும்பிக் கூடார். அப்படி வேறுபட்ட போது பொன்னினுடைய பிளவுகளைப் போல் ஒருவர் கூட்டக் கூடுவர். சிறப்புமிக்க அறிவுடையோருடைய கோபம் அம்பினாலே நீர்ப்பிளக்க எய்த பிளவுகள் போல அப்போதே நீங்கும்.

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தற்குதிமற் - றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்.

**- நாலடியார்**

தமக்குக் கீழ்ப்பட்டவர் நற்குணத்தை யுடையனவாகாத சொற் களைச் சொன்னால் அவ்வாறு சொன்னதைப் பொறுத்திருத்தலே மேலோருக் குத் தக்கதாம். பொறாது தாமும் தகுதியில் சொற் கழறினால் அது கீழ்மையின்பாற்பட்டுப் பழிப்புக்கு இடமாகும்.

ஒறுத்தார்க் கொருநாளையின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

**- குறள்**

பிறர் குற்றம் கண்டு தண்டித்தவருக்கு ஒரு நாளையின்பம். அதைப் பொறுத்தவர்களுக்கு உலகம் அழியுமளவும் புகழ் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்தல் தலை.

**- குறள்**

தன்னை வெட்டுவோரை விழாமற் சுமப்பதாகிய நிலத்தைப் போலத் தம்மை நிந்திப்பவரைப் பொறுத்தல் முதலான அறமாம்.

## நட்பு – Friendship

நல்லார் செயுங் கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லார் செயுங் கேண்மை ஆகாதே - நல்லாய்கேள்
காய்முற்றிற்றின் றீங்கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம்.

**- நன்னெறி**

நல்லார் செய்யுஞ் சிநேகமானது தினந்தோறும் நன்றாகி வளரும். தீயார் செய்யுஞ் சிநேகமானது நல்லதாகாது. காயானது முற்றினால் தின்னுதற்குரிய மதுரமாகிய கனியாகும். இளந்தளிரானது நாற்சென்று முற்றினால் யாதாகிப் போகும்? அதாவது நல்லோர் நட்பு நாள் செல்லச் செல்ல இனிதாகும். தீயோர் நட்பு அங்ஙனமாகாது கெடும்.

கற்றறியார் செய்யுங் கடுநட்புத் தாங்கூடி
உற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே - பொற்றொடி
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாம்.

கற்றறியாதவர்கள் செய்கின்ற மிகுதியாகிய சிநேகமும் நெடுங் காலம் தாங்கள் கூடியிருந்தவிடத்தும், தீங்கு விளைத்தலே உள்ள தாகும். படர்ந்த செழுமையாகிய கொடியனிது மிருதுவாகிய பூவானது மலர்ந்த அன்றைக்கு மாத்திரமே வாசனையுடைய தாகும். அதாவது மூடருடைய நட்புத் தொடக்கத்திலே நன்றாயினும் பின்பு தீங்கு விளைவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பாராய்தல் – Descriminating Friendhsip

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

**- நாலடியார்**

யானையைப் போன்றவர்களது சிநேகத்தைவிட்டு நாயைப் போன்றவர்களது சிநேகத்தைச் சேர்த்துக்கொள்ளுதல் தகுதி. யானை தனக்கு உணவு முதலியன கொடுத்துக் காத்திடும் பாகனையே கொல்லும். நாயானது தன்னையுடையவன் தன்மேற் சினந்து எறிந்த ஆயுதம் தன் உடம்பில் தைத்துள்ள தாயிருக்கை யிலும் வாலைக்குழைய வைத்து ஆட்டிக்கொண்டு தன் எளிமை யையும் அன்புடைமையையும் காட்டி நிற்கும்.

## நட்பு – Friendship

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர் பேதையார் நட்பு. **- குறள்**

அறிவுடையவது நட்பு பிறைபோல் நாள்தோறும் நிறையும் தன்மை யினதாம். அறிவில்லாதவரது நட்பு நிறைந்த சந்திரன்போல் பின்னே நாடோறும் குறையும் தன்மையானதாம்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநன நட்பது நட்பு. **- குறள்**

கண்டவிடத்து முகமாத்திரமே மலரும் சிநேகமானத சிநேகமன்று. அன்பால் உள்ளம் மலரச் சிநேகிப்பதே சிநேகமாம்.

குடிப்பிறந்து தன்கட் பழநாணுவானைக்
கொடுத்துங் கொளல் வேண்டு நட்பு. **- குறள்**

உயர்ந்த குடியிற்பிறந்து தன்னிடத்து உலகோர் சொல்லும் பழிக்கு அஞ்சுவானைப் பொருள் கொடுத்தாயினும் சிநேகம் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இனனு மறிந்தியாக்க நட்பு. - **குறள்**

குணத்தையுங் குடிப் பிறப்பையும் சுற்றத்தையும் கற்றத்தையு மறிந்து நட்புச் செய்யக் கடவன்.

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோ
லுற்றுழித் தீர்வா ருறவல்லர் - அக்குளத்திற்
கொட்டியு மாம்பலு நெய்தலு போலவே
யொட்டியுறுவா ருறவு.

**- மூதுரை**

நீர் வற்றிய குளத்தினின்றும் நீங்கிப் போகின்ற நீர்வாழ் பறவைகள் போல் ஒருவனுக்கு வறுமை வந்தபொழுது நீங்குவோர் உறவாகார். அந்தக் குளத்திலே கொட்டியும் அல்லியும் நெய்தலும் போலவே தாமும் வருத்தத்தை அனுபவித்துக் கொண்டு அவனை விட்டு நீங்காதவரே உறவாவார்.

கோட்டுப் பூப்போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில்.

**- நாலடியார்**

மரக்கிளைகளில் உண்டாகின்ற மலர்போல முன்னே முகமலர்ச்சி பெற்றுப் பின்பு அம்மலர்ச்சி குவியாமல் ஒருவரோடு ஒருவர் விருப்பம் கொண்டதுவே விருப்பமாயிருப்பது சிநேக தருமத்தைக் காத்தலாகும். தோண்டப்பட்ட நீர் நிலையில் உண்டாகிற மலர் போல முதலில் முகமலர்ச்சி காட்டிப் பின்பு அம்மலர்ச்சி ஒழிந்து முகம் சுருங்குப வர்களை விரும்புபவர்களும் சிநேகிப்பவர்களும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பிற் பிழை பொறுத்தல் – Forbearance in Friendship

நல்லாரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
யல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

- நாலடியார்

நற்குண நற்செய்கை உடையாரென்று ஆராய்ந்தறிந்து தெளிந்து தம் மால் மிக விரும்பிச் சிநேகஞ் செய்து கொள்ளப்பட்டவரை நற்குண நற்செய்கை யுடையவரல்லாதவரென்று கண்டாலும் அவர் குற்றங்களைப் பிறர் அறியக் கூறி வெளிப்படுத்தாமல் தம் மனத்திலேயே அடக்கி வைத்துக் கொள்ளுதலே தகுதி. ஏனெனில் நெல்லுக்கம் பயனற்ற அதன் உமியாகிய குற்றம் உள்ளது. யாவ ராலும் பானத்தின் பொருட்டு மிக விரும்பி நாடியடையப்படு கின்ற நீருக்கும் நுரையாகிய குற்றம் உள்ளது. சிறப்புடைய மலருக்கும் அதன் மேல் தழுவியுள்ள புறவிதழாகிய குற்றம் உள்ளது.

நல்லாரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
யல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

- நாலடியார்

நற்குண நற்செய்கை உடையாரென்று ஆராய்ந்தறிந்து தெளிந்து தம் மால் மிக விரும்பிச் சிநேகஞ் செய்து கொள்ளப்பட்டவரை நற்குண நற்செய்கை யுடையவரல்லாதவரென்று கண்டாலும் அவர் குற்றங் களைப் பிறர் அறியக் கூறி வெளிப்படுத்தாமல் தம் மனத்திலேயே அடக்கி வைத்துக் கொள்ளுதலே தகுதி. ஏனெனில் நெலுக்கம் பயனற்ற அதன் உமியாகிய குற்றம் உள்ளது. யாவரா லும் பானத்தின் பொருட்டு மிக விரும்பி நாடி யடையப்படுகின்ற நீருக்கும் நுரையாகிய குற்றம் உள்ளது. சிறப்புடைய மலருக்கும் அதன் மேல் தழுவியுள்ள புறவிதழாகிய குற்றம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் – Charity

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும் பயனுமாற்றவே கொள்க - கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகுமுடம்பு.

**- நாலடியார்**

பெறுதற்கு அரிதாகிய மானிட சரீரத்தை அடைந்த பயனால் பெரிய பயனான தருமத்தையும் மிகுதியாகவே செய்து வைத்துக கொள்ளக் கடவர், மனித சரீரம் கரும்பானது தன்னைப் பக்குவமாக ஆலையில் வைத்து ஆட்டினவர்கட்குத் தன்னிடத்துப் பொருந்திய சாற்றைக் கொடுப்பதுபோல மறுமைக்கும் வேண்டிய அறமாகிய பயனை தன்னை நல்வழியில் உபயோகப் படுத்தியவர்கட்குக் கொடுத்துப் பின்பு அக்கரும்பினது சக்கை போல நீங்கிப்போம்.

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தேளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது.

**- மணிமேகலை**

இளமை நிலையாது. இவ்வுடம்பு நிலையாது. வான் போல உயர்ந் திருக்கும் பெரும் செல்வமும் நில்லாது. பெற்ற புதல்வர்களும் சுவர்க்க லோகத்திற்குப் போவதற்கு நமக்கு உதவமாட்டார்கள். பெரிய தருமமே நமக்குப் பெரிய துணையானது.

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந் தறஞ்செய் துய்கவே - வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்கண் ணென்செய்வார் பேசு.

**- நன்நெறி**

உயிரைக்கொண்டு செல்கின்ற கொடுமையாகிய இயமனானவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லும்படி அணுகுவதற்கு முன்னே மனங் கரைந்து தருமங்களைச் செய்து பிழைக்கக் கடவாய். வெள்ளம் வருவதற்கு முன்னே கரையைக் கட்டி வையாதவர் அதுபெருகி வரும்பொழுது யாது செய்வார்?

சிறப்பீனுஞ் செல்வமும் மீனுமறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

- குறள்

மோட்சத்தையும் கொடுக்கும். சுவர்க்க முதலாகிய செல்வத்தை யும் கொடுக்கும். ஆதலால் மனிதருயிர்க்குத் தருமத்தின் மேற்பட்ட பெருக்கத்தைத் தருவது யாது?

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி

- குறள்

ஒருவனுக்குச் செய்யத்தக்கது நல்வினை. செய்யத்தகாதது தீவினை.

## பொய்மை – Falsehood.

மறைமுழு துணர்ந்தாரேனு மகப்பல புரிந்தாரேனுங்
குறைவறு தானமெல்லாங் கொடுத்தறங் கூர்ந்தாரேனு
நிறைபெருந் தீர்த்மெல்லா நிரம்புறத் துளைந்தாரேனுங்
கறையுறு மொருபொய் கூறிற் கடுநரகழுந்துவாரே.

- காசி இரகசியம்.

வேதங்களை முற்றும் அறிந்தவராயினும் யாகங்கள் பல செய்தவரா யினும் குற்றமற்ற தானங்கள் எல்லாம் செய்தவராயினும் விசேட தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் பூரண ஸ்னானம் செய்தாராயினும் குற்றம் பொருந்திய ஒரு பொய்யைச் சொல்லுவாராகில் அவர்கள் கொடிய நாகத்துக்கு ஆளாவர்.

தான்கெடினுந் தக்கார் கேடெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார் கைத்துண்ணற்க - வான் கவிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

**- நாலடியார்**

தான் அழிய நேர்ந்தாலும், மேலோரது கெடுதலை நியைாதிருக்கக் கடவன். தன் உடம்பு தணு பசியால் மெலிந்து அழிவதாயினும் உண்ணத் தகாதவரதுகையினால் வரும் உணவை உண்ணாதிருக்க, ஆகாயத்தாற் கவியப்பட்ட பூமி முழுவதையும் பெறுவதாயிருந்தா லும் தன் வெறுமையைப் பொறுக்க மாட்டாமை பற்றி இடை யிலே பொய்யோடு கலந்தசொல்லைச் சொல்லாதிருக்க.

தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். **- குறள்**

தனது நொஞ்சினாலே பொய் என்று தான் அறிந்ததைப் பிறர் அறிந்தில ரென்று எண்ணிச் சொல்லாதிருக்கக் கடவர் - அப்படிச் சொல்வானா கில் அவனது மனம் அப்பாவத்துக்குச் சாட்சியாய் நின்று அதன் பயனாகிய துன்பத்தை அடைவிக்கும்.

## வாய்மை – Truthfulness

வாய்மை தப்பினார்க ளிந்த மானிலத்தி லீனராய்த்
தீமையுற்று மேலுளோர் பழிக்கவே திரிந்துபின்
றூய்மையற்ற கும்பியுட் டுரைந் தழுங்குவாரென
வாய்மனுப்பகர்ந்த வேத சாகை முற்று மறையுமே.

**- பிரமோத்தர காண்டம்**

இப்பூவிலகின் கண்ணே, பொய்மொழி புகலாதார், இழிந்தவர் களாய் தீமையுடையவர்களாய், பெரியோர்கள் நிந்திக்கம்படி திரிந்து, மறுபிறப்பில் பரிசுத்தமற்றமாக்கும்பியுள் புழுவாகப் பிறந்து அழுந்து வார்கள் என்று மனுதரும் சாஸ்திரம் அறையும்.

மெய்யே சிறந்த பெருநலமா மெய்யே யெவையு நிலைபெறுத்து
மெய்யாலழல்கால் கதிர் பிறவுந் தத்தந்தொழிலின் விலகாவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யே யெவைக்கு மிருப்பிடமா மெய்யே மெய்யே சிவமாகு
மெய்யே பிரமபதமு மெனப்புகன்றான் வினைதீர் காசிபனே.

**- காஞ்சிப்புராணம்**

மெய்சொல்லுவதே சிறந்தபெரிய நன்மையுடையது, மெய்யே எல்லா வற்றையும் அழியாமல் இருக்கச் செய்யும், வாய்மையினால் சூரிய சந்திரர் முதலியவகைள் தத்தம் தொழில்களில் நின்றும் விலகா மெய்யே எல்லாவற்றிற்கும் இருப்பிடம் மெய்யே சிவம், மெய்யே பிரமனது திருவடியைக் கொடுக்கும் என்றும் குற்றமற்ற காபி முனிவர் திருவாய்மலந்தருளினார்.

அண்ணிய கிளையுமில்லு மரும்பெருமகவு மன்புந்
திண்ணிய சீருமிக்க செல்வமுந் திறலுந்தேசு
மெண்ணிய பொருள்கள் யாவுமியற்றிய தவமுமேனைப்
புண்ணிய மனைத்துஞ் சேரப் பொய்மையாற் பொன்றுமன்றே.

**- வில்லிபாரதம்**

நெருங்கிய சுற்றத்தினரும், வீடும், அரிய பெரிய புதல்வர்களும், அன்பும் பெரிய கீர்த்தியும் செல்வமும், தைரியமும் அழகும், ஈட்டிய பொருளும் இயற்றிய தவமும் மற்றும் செய்த புண்ணியங் கள் அனைத்தும் பொய்பேசுவதனால் அழியும்.

வாய்மை யெனப்படுவ தியாதெனில் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

**- குறள்**

மெய்மை யென்று சிறப்பித்துச் சொல்வது யாதெனில் பிறிதோரு யிருகுச் சிறிதாயினும் தீமையைத் தராத சொற்களைச் சொல்லுதல். இதுவே சத்தியம் என்பதாம்.

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை.

**- குறள்**

ஒருவன் தன் மனத்தோடு பொருந்த உண்மையைச் சொல்லு வனாயின் அவன் தவத்துடனே தானத்தை ஒருமிக்கச் செய்வாரி னும் சிறப்புடை யவனாவான்.

**திரு. ரகுபரன் (விரிவுரையாளர்)**
*தெ/கி பல்கலைக்கழகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பாக வாகனம் செலுத்தும் முறை

## *வாகன விபத்துக்கள் ஏற்படுவதற்கான மூல காரணங்கள்*

*01.* வீதிப்போக்குவரத்து விதிகளைச் சாரதிகளும், தெருக்களை உபயோகிப்பவர்களும் சரியாக அனுசரியாமை.

*02.* கவனயீனமாக வாகனங்களைச் செலுத்துதல் / குழப்பமான மனநிலை.

*03.* அதிவேகத்துடன் வாகனங்களைச் செலுத்துதல்.

*04.* தெருக்களிற் செல்வதற்குத் தகுதியற்ற வாகனங்களின் பாவனை.

**வீதியில் விபத்துக்களைத் தவிர்க்கும் வகையிற் பாதுகாப்பாக வாகனங்களை செலுத்துவதற்குச் சாரதிகள் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கவேண்டியவைகள்.**

*01.* விபத்துக்கள் ஏற்படக் கூடும் என உணரப்படும் இடங்களில் முன்னெச்சரிக்கையுடன் அவதானமாக உரிய முறையில் வாகனங்களைச் செலுத்துதல்.

*02.* பாதுகாப்பான இடைவெளியில் வாகனங்களைச் செலுத்துதல்.

*03.* இயலுமானவரை தனது வாகனம் செலுத்தும் ஒழுங்கைச் சரியாகப் பேணல்.

*04.* பாதுகாப்பான முந்திச் செல்லும் முறை.

*05.* இதற்குமுன்னர் தான் பல ஆண்டுகாலம் எந்தவொரு விபத்தையும் சந்திக்கவில்லை என்ற மனோநிலையில், தான் தோன்றித்தனமாக வாகனத்தைச் செலுத்துவதைக் கைவிடல்.

***பாதுகாப்பான வாகனச் செலுத்துகை***

பாதுகாப்பான முறையில் வாகனத்தைச் செலுத்தும் சாரதியானவர் மற்றைய சாரதிகளின் முறைகேடான வாகன செலுத்துகைக்கும், மோசமான தெருக்களின் நிலைமைத்தன்மை களையும். காலநிலை களையும் கருத்திற்கொண்டு எந்த நேரமும் முன்னேற்பாடான முறை யில் வாகனங்களைச் செலுத்தவேண்டும். அத்துடன் வாகனமானது தெருக்களில் செலுத்துவதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் உள்ளதா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**யாழ். மாவட்டத்தில் வாகன விபத்துக்கள் விளைவிக்கும் விபத்துக் கள் அதிகரித்துக் கொண்டே காணப்படுகின்றன. அதற்கான காரணங்கள் பின்வருமாறு :-**

01. மது போதையில் வாகனம் செலுத்துதல்.
02. உள் வீதியிலிருந்து மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளில் வருவோர்கள்; பிரதான வீதியில் வருகின்ற வாகனங்களைக் கவனியாது நேரடியாகப் பிரதான வீதிக்குள் நுழைதல்.
03. நாற்சந்தி(மத்திய வளைவு)களில் வலப்பக்கம் வருகின்ற வாகனங்கள் செல்வதற்கு இடங்கொடாமை.
04. ஏதோ ஒரு வாகனம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளபோது அல்லது வாகனம் செல்லுகின்றபோது மோட்டார் சைக்கிளை அல்லது துவிச்சக்கர வண்டியை முன்னோக்கிச் செலுத்துகின்ற போது எதிரே வருகின்ற வாகனம் பற்றி அவதானம் இல்லாமல் வாகனம் செலுத்துதல்.
05. சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தக் கொடுத்தல்.
06. அளவுக்கு அதிகமான வேகத்தில் வாகனம் செலுத்துதல்.
07. வீதியில் ஒரே சமாந்தரத்தில் மூன்று அல்லது நான்கு துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்துதல்.
08. பாதசாரிகள் வீதிகளைக் கடந்துசெல்ல அடையாளமிடப் பட்ட இடங்களில் அவர்களுக்கு இடங்கொடாமல் வாகனம் செலுத்துதல்.
09. திருத்தப்படாத (குறைபாடுள்ள) வாகனங்களை வீதியிற் செலுத்துதல்.
10. சேதமான தேய்ந்த டயர்களுடன் வாகனங்களைச் செலுத்துதல்.
11. வீதியில் இடம் உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்தாது நெரிசலான இடங்களில் வாகனங்களை நிறுத்தி வீதித் தடைகளை ஏற்படுத்தல்.
12. வீதி வளைவுகளில் எதிரே தெளிவற்றுக் காணப்படுகின்றபோது வாகனங்களை முன்னோக்கி செலுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. வலப்பக்க வளைவிற் செல்லுகின்றபோது வாகனத்தை இடதுபக்க ஓரமாய்ச் செல்லாது; குறுகிய அளவில் வலது பக்கமாகவே பாரப்படுத்தி வளைவிற் செலுத்துதல்.
14. இரவு வேளையில் வெளிச்ச விளக்கு இன்றி அல்லது ஒருபக்க வெளிச்ச விளக்குடன் வாகனம் செலுத்துதல்.
15. இரவு வேளையில் எதிரே வருகின்ற வாகனங்களுக்குத் தமது வெளிச்ச விளக்கைக் குறைக்காமல் (டிம் இன்றி) வாகனத்தை செலுத்துதல்.
16. இரவு வேளையில் வீதியோரங்களில் வாகனத்தை நிறுத்தி விடப்படுகின்றபோது அபாய விளக்கு எரியப்பட விடாமை.
17. இரவு வேளையில் துவிச்சக்கர வண்டியில் வெளிச்ச விளக்கு இல்லாமலும், பின்பக்கச் சில்லுச் சேர்த்தாங்கியில் (மக்காட்) வெளிச்சம் (சிவப்புக்கல்) இல்லாமற் செல்லுதல்.
18. தலைக்கவசம் இல்லாமல் (ஹெல்மட்) மோட்டார் சைக்கிளிற் செல்லுதல்.
19. வீதியைக் கடக்கின்றபோது முதலில் வலப்பக்கமும் பின்னர் இடப்பக்கமும் மீண்டும் வலப்பக்கமும் பாராமல் வீதியைக் கடந்து செல்லுதல்.
20. பஸ் நிறுத்தப்பட்டுள்ளபோது பின்பக்கம் செல்லாது முன் பக்கத்தால் வீதியைக் கடத்தல்.
21. பாதசாரிகள், சைக்கிள்கள் ஓட்டுனர்கள், சாரதிகள் ஆகியோர் இரு பக்கங்களும் அவதானம் இல்லாமற் செயற்படல்.
22. வாகனங்களைச் செலுத்துகின்போது கையடக்கத் தொலை பேசியிற் பேசுவதைத் தவிர்த்தல்வேண்டும்.
23. மேலே உள்ள குறைபாடுகளை அவதானித்துச் செயற்பட்டால் தாங்கள் விபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்வதுடன், விலை மதிக்க முடியாத உயிரையும், தங்களின் பெறுமதியான உடைமை யையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**வாகனங்களுக்கிடையிலான இடைவெளி**

முன்னாற் செல்லும் சாரதி தமது வாகனத்தை நிறுத்திக் கொள்ளும் முகமாகத் தேவையான அளவு இரண்டு வாகனத்திற்கும் இடைவெளி வைத்துக்கொள்ள வேண்டும். வாகனத்தின் வேகத்திற்கேற்பப் பிரேக் பாவிக்கும் தூர அளவு கூடும்.

கீழ் அட்டவணையைப் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| வேகம் ம.கி.மீ | வாகனங்களுக்கிடையான இடைவெளி | நினைக்கும் கால தூரம் | பாவிக்கும் தூரம் |
|---|---|---|---|
| 35 எனின் | மீ 12 க்கு | மீ 6 | மீ 6 |
| 50 எனின் | மீ. 23 க்கு | மீ 9 | மீ 14 |
| 65 எனின் | மீ. 40 க்கு | மீ 12 | மீ 28 |
| 80 எனின் | மீ.56க்கு | மீ 15 | மீ 41 |

## சந்திகளில் வாகனம் செலுத்தும் முறை

### 01. T சந்தி





### 02. சுற்றுவட்டம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *03. நாற் சந்தி*




**மேலேயுள்ள படங்களைக் கவனிக்க.**

*01.* எதிரில் உள்ள சந்தியில் இடப்பக்கமாகத் திருப்பவேண்டு மென்றால் முதலாவது கண்ணாடியை பார்த்துத் திரும்பும் சைகை காட்ட வேண்டும். பின் பார்க்கும் கண்ணாடியிற் பாதுகாப்புடன் பார்த்து இடப்பக்கமாகக் கோட்டில் வாகனத்தைச் செலுத்தவும்.

*02.* முன்னே வலது பக்கத்தில் திருப்ப வேண்டுமெனில் முதலாவது கண்ணாடியைப் பார்த்து; திருப்பும் சைகையைக் காட்டவும். பின், பார்க்கும் கண்ணாடியிற் பாதுகாப்புடன் பார்த்து; வலது பக்கத்தில் திரும்பும் வலது கோட்டில் வாகனத்தைச் செலுத்தவும்

*03.* பாதையில் நேரே முன்செல்ல வேண்டுமென்றால் இடமாகவும், மூன்று வாகனஞ் செலுத்தும் இடைவெளியுள்ள பாதையெனில் மத்தியில் அமைந்துள்ள வாகனப் பாதையில் செல்லவும்.

*04.* சந்திகள் விளக்கு சைகை (ஒளி) கள் மூலமும் பொலிஸ் சைகை மூலமும் செயற்படுத்தப்படுகின்றன. இவ்விரு முறையிலும் செயற் படுத்தப்படாத நிலையில் நாற் சந்தியில் வலப்பக்கமாக வாகனங் களுக்கு இடமளிக்க வேண்டும். T அமைப்புப் போன்ற சந்தியில் நீர் பிரதான பாதையில் இருந்து வலப்பக்கமுள்ள கிளைப்பாதைக்குத் திரும்பும்போது முன்னேவரும் வாகனங் களுக்கு இடமளிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனத்தை நிறுத்தி வைத்தல்

1) வாகனத்தை நிறுத்துவதற்கு எண்ணினாற் பிரயாணஞ்செய்யும் திசைக்கு முகம் காட்டி வேறு வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு இடது பக்கத்தில் நிறுத்தவும். என்ஜினை செயல் இழக்கச்செய்து; ஹேன் பிரேக் இழுத்து; விசேடமாகப் பின் பக்கம் பார்த்துக் கதவை திறக்கவும். பூட்டியும் விடவும்.

2) கீழ்க்காணும் இடங்களில் வாகனம் நிறுத்தக்கூடிய தூர அளவு காட்டப்பட்டுள்ளது.
பாதசாரிகள் கடக்கும் இடத்திலிருந்து மீ. 15
தீயணைக்கும் நீர்க்குழாய் அமைந்துள்ள இடத்துக்கு மீ. 15.
சந்திகளிலிருந்து மீ. 25.
பஸ் நிறுத்துமிடங்களிலிருந்து மீ. 30

## பின்பக்கத்திற் செலுத்துதல்

பின்பக்கமாகச் செலுத்தும்போது பார்வை தெளிவாக இல்லாதபடியாற் கவனமாகச் செலுத்தவும், கிளைப் பாதையில் இருந்து பிரதான பாதைக்குப் போவது கூடாது. பிரதான பாதையில் இருந்து சிறு பாதைகளுக்கு வாகனத்தை செலுத்தலாம்

## இரவு நேரத்தில் ஓட்டுதலும்; நிறுத்தி வைத்தலும்

1) நித்திரை மயக்கம், களைப்பு மிகுதியாக இருப்பின் ஓட்டுவதைத் தவிர்க்கவும்.

2) வாகனத்தின் முன்கண்ணாடி தெளிவில்லையெனில், கழுவிச் சுத்தமாக்கிக் கொள்ளவும். மழை மற்றும் மூடுபனி என்பனவற்றிற்கு விசேடமான கவனஞ்செலுத்தவும்.


3) பாதையில் வேறு வாகனங்கள் முன்னே எதிர்ப்படும் வேளையில் உமது பிரதான விளக்கின் வெளிச்சத்தைக் குறைத்துக் கொள்ளவும். எதிர்வாகனத்தின் பிரதான விளக்கு ஒளியில் உமது கண், ஒளித்தாக்கம் பெற்றால், வேகத்தைக் குறைக்கவும், பாதை தெரியவில்லை என்றால் வாகனத்தை நிறுத்தவும், விசேடமாகச் சாரதியின் பக்கமாகவுள்ள விளக்குச் செயலிழந்த வேளை விபத்து ஏற்படவாய்ப்புண்டு.

4) வாகனத்தை நிறுத்தவேண்டுமெனில் பாதையில் ஓடும் வாகனங்களுக்குத் தடை ஏற்படாதவாறு நிறுத்தும் விளக்கை எரியவிட்டுப் பிரயாணஞ் செய்யும் திசைக்கு முகங்காட்டி இடது பக்கத்தில் நிறுத்தவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சைகை விளக்கின் மூலம் வாகனத்தைச் செயற்படுத்தல்




1) *சிவப்பு நிறம் :- நில்*
சைகை விளக்கில் சிவப்பு நிறம் காட்டினால் நிறுத்தும் கோட்டின் பின்னே நிறுத்த வேண்டும்.



2) **சிவப்பும் செம்மஞ்சள் நிறமும் :-** செல்வதற்குத் தயாராகச் சிவப்பு விளக்கு எரியும் போது செம்மஞ்சள் விளக்கு எரியத் தொடங்கினால், பச்சை விளக்கு எரிவதற்கு அண்மித்துள்ளது என்பதாகும். ஆகையாற் செல்வதற்குத் தயாராகவேண்டும். (முன்னுக்குச் செல்லக் கூடாது)




3) *பச்சை நிறம் :- செல்*
பச்சை விளக்கிற்கு முகங்காட்டி நிற்கும் வாகனங்கள் நேரே முன் செல்ல முடியும் பாதுகாப்புள்ளதெனில், இடப்பக்கமோ வலப்பக்கமோ செலுத்த முடியும்.




4) *செம்மஞ்சள் நிறம் :- நில்*
சிவப்பு நிற வெளிச்சம் எரிவதற்கு மிகவும் குறுகிய நேரமே இருக்கிறது நில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**5) சிவப்பு நிறமும் பச்சை அம்புக்குறி :-**


சிவப்பு நிறமும் பச்சை அம்புக்குறியின் அடையாளமும் பச்சை நிற அம்பு காட்டும் திசையால் மட்டும் ஓட்டுவதற்கு அனுமதி யளிக்கப்பட்டுள்ளது என்பதே.



**6) விட்டு விட்டு எரியும் செம்மஞ்சள் சமிக்ஞை :-**

விட்டு விட்டு எரியும் செம்மஞ்சள் நிற சமிக்ஞையில் அறிவிப்பதாவது சமிக்ஞை விளக்கு மூலமோ, பொலிஸ் சமிக்ஞை மூலமோ செயற்படவில்லை என்பதே. அப்படியெனில் சாதாரணமாகச் சந்திகளில் நடைமுறைப் படுத்தப்படும் வீதிச்சட்டத் தைக் கடைப்பிடிக்க வேண்டும். (2-4) சம்பந்தமானது.

**7) விட்டுவிட்டு எரியும் சிவப்பு நிற சமிக்ஞை :-**



அதில் அறிவுறுத்தப்படுவது புகை யிரதக் குறுக்குப் பாதை, தீய ணைப்பு மத்தியஸ்தானம் ஆகியன அவ்வித இடங்களில் வாகனத்தை நிறுத்தி இடமளிக்க வேண்டும்.

**(இச் சைகைகளுக்குக் கட்டாய மாக அடிபணிய வேண்டும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபாய எச்சரிக்கை சைகைகள்



1.
இடது பக்க வளைவு
முன்னாள்



2.
வலது பக்க வளைவு
முன்னால்



3.
இடது பக்கமாக
இரட்டை வளைவு
முன்னால்



4.
வலப் பக்கமாக
இரட்டை வளைவு
முன்னால்




5.
முன்னால் வலது
பக்கத்துக்கு கொண்டை
ஊசி வளைவு



6.
முன்னால் இடது
பக்கத்துக்கு கொண்டை
ஊசி வளைவு



7.
முன்னால் இரட்டை
வாகனப் பாதையின்
முடிவு



8.
முன்னால் பாதை
ஒடுங்குகிறது



9.
முன்னால் குறுக்கு
வீதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10.
முதலாவது பக்கப்
பாதை இடது பக்கமாக
அடுத்தடுத்து வரும்
சந்தி முன்னால்



11.
முதலாவது பக்கப்
பாதை வலது பக்கமாக
அடுத்தடுத்து வரும்
சந்தி முன்னால்



12.
T உரு கொண்ட
சந்தி முன்னால்



13.
Y உரு கொண்ட
சந்தி முன்னால்



14.
இடமிருந்து வரும்
வாகனம் பிரதான
பாதையில் இணையும்
சந்தி முன்னால்



15.
வலமிருந்து வரும்
வாகனம் பிரதான
பாதையில் இணையும்
சந்தி முன்னால்



16.
குறுகிய பாலம்
ஒன்று முன்னால்



17.
முன்னால்
நிறுத்தவும்



18.
முன்னால் வழி
விடவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



19.
முன்னால்
சுற்றுவளைவு



20.
முன்னால்
ஒளிச்சமிக்ஞைகள்



21.
ஆபத்தான சரிவு
முன்னால்
(கீழ்நோக்கிய)



22.
ஆபத்தான ஏற்றம்
முன்னால்



23.
வழுக்கும் பாதை
முன்னால்



24.
கற்பாறைகள் விழும்
இடம் முன்னால்



25.
முன்னால் பாதசாரிகள்
கடவை




26.
முன்னால் பிள்ளைகள்
கடவை



27.
முன்னால் பாதை வேலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



28.
முன்னால்
பாதுகாப்புடைய
புகையிரதக்கடவை



29.
பாதுகாப்பற்ற
புகையிரதக் கடவை
முன்னால்



30.
முன்னால் பஸ்வண்டி
ஒழுங்கை



31.
முன்னால் துவிச்சக்கர
வண்டி ஒழுங்கை



32.
முன்னால் துவிச்சக்கர
வண்டி கடவை



33.
மந்தை அல்லது
விலங்கு முன்னால்
பாதையைக் கடக்கக்
கூடும்



34.
ஓடத்துறை ஒன்றிலுள்ள
வீதி முன்னால்



35.
முன்னால் நீர்
வழிந்தோடும் பகுதி



36.
முன்னால்
வேகத் தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்யும் சைகைகள்

## ஒழுங்குபடுத்தும் சைகைகள்



37.
உட்பிரவேசித்தல் கூடாது
(இதன் கருத்து யாதெனில்
உட்பிரவேசித்தல் தடையான
போதும் எதிர் திசையிலிருந்து
வரும் வாகனங்களுக்கு வர
முடியும் என்பதே)



38.
இடப்பக்கம்
திரும்பாதே.



39.
வலப்பக்கம்
திரும்பாதே.



40.
U உருவில்
இருக்குமாறு
திரும்பாதே.



41.
வாகனங்கள்
முந்திச் செல்லத் தடை



42.
ஒலி எழுப்பத்தடை



43.
வீதி மூடப்பட்டுள்ளது
(இப்பாதையில் உட்புகுதலும்
எதிர் திசையில் இருந்து வருவதும்
தடையாகும்)



44.
லொறி வண்டிகளுக்கான
பாதை மூடப்பட்டுள்ளது.



45.
பஸ்வண்டிகளுக்கான
பாதை மூடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



46.
சகல வாகனங்களுக்கும் பாதை மூடப்பட்டுள்ளது.



47.
வாகனம் நிறுத்தி வைத்தல் தடை.



48.
வாகனம் நிறுத்தி வைப்பதும் ஏற்றுவதும் கூடாது.



49.
ஒற்றை நாட்களில் வாகனம் நிறுத்தக் கூடாது.



50.
இரட்டை நாட்களில் வாகனம் நிறுத்தக் கூடாது.

## மட்டுப்படுத்தும் சமிக்ஞைகள்




51.
வேக அளவு



52.
வேகக் கட்டுப்பாடு முடிவு




53.
அகலத்தின் வரையறை




54.
உயரத்தின் வரையறை




55.
எடையின் வரையறை




56.
எக்சலுக்கு மேலே இருக்க வேண்டிய பாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாய சைகைகள்

## முக்கியத்துவமான சைகைகள்



57.
இடப்பக்கம் திரும்பு



58.
வலப்பக்கம் திரும்பு



59.
முன்னால்
இடப்பக்கம் திரும்பு



60.
முன்னால்
வலப்பக்கம் திரும்பு



61.
இந்தப்பக்கமாக
கடந்து செல்



62.
நேரே செல்




63.
கட்டாய சுற்று
வளைவு



64.
வழி விடவும்
பாதையில் வழி விடவும்




65.
நிறுத்து



66.
பாதுகாப்பற்ற
புகையிரத
குறுக்கு வீதி



67.
முக்கியத்துவ
வீதி
(முன்னுரிமை வீதி)



68.
முக்கியத்துவ
வீதி முடிவு



69.
முன்னால் வரும்
வாகனங்களுக்கு வழி
விடு.



70.
முன்னே செல்லும்
வாகனங்களுக்கு
வழி விடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதிகளுக்கு பயனுள்ள வேறுசைகைகள்



71.
ஒரு திசை வழி



72.
பஸ் வண்டி
தரிப்பிடம்




73.
வாகனம் நிறுத்துமிடம்



74.
பஸ் வண்டி மட்டும்
செல்லும் ஒழுங்கை
ஆரம்பம்



75.
பாதசாரிகள்
கடவை



76.
பஸ் வண்டி மட்டும்
செல்லும்
ஒழுங்கை முடிவு



77.
ஆஸ்பத்திரி



78.
துவிச்சக்கர வண்டி
மட்டும் செல்லும்
ஒழுங்கை ஆரம்பம்



79.
துவிச்சக்கர வண்டி
மட்டும் செல்லும்
ஒழுங்கை முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதையின் மேல் அமைந்துள்ள வீதிக் குறியீடுகள்



80.
வாகனங்கள் ஒளி சைகை மூலமாகவோ
பொலிஸ் மூலமாகவோ செயல்படும் வீதிகள்
பிரிந்து செல்லும் சந்திகள் நிறுத்தும் கோடு



81.
நிறுத்து என்ற சைகை
அமைந்துள்ள கோடுகள்



82.
சுற்று வளைவில் அமைந்துள்ள வழிவிடும்
கோடு சுற்று வளைவில் வலப்பக்கமிருந்து
வரும் வாகனத்திற்கு இடமளிப்பது எவ்விடத்தில்
என்பதை விளக்க அமைந்துள்ள நிறுத்தும் கோடு



83.
வழி விடு எனும் கோடு பிரதான
வீதியிலிருந்து இருபுறமும் வரும்
வாகனங்களுக்கு வழிவிட்டு ஓட்ட
வேண்டும்



84.
ஓடும் ஒழுங்கு
அடையாளம்



85.
குமிழ்க்கல்
(பூனைக்கல்)



86.
வலது பக்கம்
திரும்புவதைத் தவிர
குறுக்கீட்டைத்
தடை செய்யும்
நடுக்கோடு



87.
வாகனங்கள்
நிறுத்தி வைப்பது
கூடாது என்பதை
ஓரத்தில்
நெடுகலாக
அமையும் கோடு
காட்டுகிறது.



88.
குறுக்கீட்டைத்
தடைசெய்யும்
நெடுங்கோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



89.
ஓடும்
ஒழுங்கைக்
குறியீடு



90.
வளைவொன்றின்
ஓரத்தைக்
காட்டும் நெடுங்கோடு



91.
அபாய
எச்சரிக்கைக்
கோடு



92.
மத்தய கோடும்
உடைந்த
கோடும்




93.
செல்லும்
வழியில் ஓரம்




94.
பாதசாரிகள் கடவை




95.
சந்திப்பெட்டி



96.
சந்திப்பெட்டி


## அபாயகரமான பிரதேசம்



97.
எதிர்த்திசையிலான
போக்குவரத்து



98.
ஒரே திசையிலான
போக்குவரத்து



99.
தகுதியான வண்டி ஓடும்
வழியை வாகனங்களுக்கு
காட்டுவதற்கு அமைந்துள்ள
அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




100.
கட்டாயமாக இடது பக்கத்திற்கு திருப்ப வேண்டும் என வாகனங்களுக்கு அறிவிக்க காட்டியுள்ள அடையாளம்.




101.
கட்டாயமாக நேரே செல்ல வேண்டும் என வாகனங்களுக்கு அறிவிக்க காட்டியுள்ள அடையாளம்




102.
கட்டாயமாக வலது பக்கத்திற்கு திருப்ப வேண்டும் என வாகனங்களுக்கு அறிவிக்க காட்டியுள்ள அடையாளம்

STOP

103.
நிறுத்து சைகை 61.85 வீதி அடையாளங் கொண்ட வீதியின் முக்கிய இடம் அண்மிக்கின்றதென காட்டும் அடையாளம்

SLOW

104.
முன்னே அதிக கவனத்துடன் செல்ல வேண்டுமென அறிவுறுத்தும் அடையாளம்


BUS
LANE

105.
வசுவண்டி செல்லும் ஒழுங்கை

CYCLE
LANE

106.
துவிச்சக்கர வண்டி செல்லும் ஒழுங்கைதுவிச்சக்கர வண்டி கடவை.

## பாதசாரிகளுக்கான சைகை




107.
செல்லும் வழியில் ஓரம்



108.
சிவப்பு மனிதன்



109.
பச்சை மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் கொடுக்கும் சைகைகள்

## (விசேட ஒழுங்கு படுத்தும் சைகைகள்)


110.
கடுகதிப் பாதை


111.
கடுகதிப்பாதை முடிவு



112.
பாதசாரி கடக்கும் நிலக்கீழ்ப் பாதை


113.
பாதசாரி கடக்கும் மேல்ப் பாதை


114.
பாதசாரிகளுக்கு மட்டுமான வீதி


115.
வாகனங்களுக்கான வீதி


116.
வாகனங்களுக்கான வீதி முடிவு


117.
மெதுவாகச் செல்லும் வீதி பாவனையாளர்களின் திசைகாட்டி

# பாதைகளுக்கான வழி இலக்கச் சைகைகள்



118.
கடுகதிப்பாதைக்கான வழி இலக்கச் செய்கை



119.
"A" வகுப்பு நெடுஞ்சாலைக்கான வழி



120.
"B" வகுப்பு நெடுஞ்சாலைக்கான வழி

# சேவை வசதிக்குரிய சைகைகள்


121.
பொதுத் தொலைபேசி


122.
தகவல் மையம்


123.
எரிபொருள் நிலையம்


124.
தொழிற் சாலை


125.
பழுது பார்ப்புச் சேவை


126.
சிற்றுண்டி சாலை


127.
உணவு விடுதி


128.
விடுதி



129.
பகிரங்கக்கடற்கரை


130.
சுற்றுலா இடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட சைகைகள்




131.
அவதானம், தீர்மானம்
செயற்பாடு





132.



133. சரியான அமுக்கம் | கூடிய அமுக்கம் | குறைந்த அமுக்கம்



134.
மத்திய நெடுங்கோடு



135.
இரட்டை மத்திய நெடுங்கோடு



136.
வீதியின் ஓரக் கோடு



137.
ஒளிச்சைகை/ பொலிஸ் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிறுத்தற் கோடு



138.
நிறுத்தற் கோடு



139.
சுற்று வளைவில் வழி விடவும் கோடு



140.
வழி விடவும் கோடு



141.
கார் நேராகச் செல்லவும், ஆட்டோ வலது பக்கம் திரும்பிச் செல்லவும் முடியும்



142.
T சந்தியில் கட்டாயம் நிறுத்த வேண்டும்



143.
இரண்டு வாகனங்களும் நேராகச் செல்லவோ, வலது பக்கம் திரும்பவோ முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டும் சைகை



144.
தடை (அட்டை குறியீடு)



145.
மாற்று வழியடைப்பலகை


## பொலிஸ் சமிக்ஞை



முன்னால், பின்னால் வரும் வாகனங்களை நிறுத்து



நிறுத்துங்கள்



பின்னால் வரும் வாகனத்தை நிறுத்து



முன்னே வா



முன்னே வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல்தரும் சைகைகள்

## முன்னரே நெறிப்படுத்தும் சைகைகள்

146.




147.




148.



149.



150.






151.




152.




153.
தூரத்தை உறுதிப்படுத்தும் சமிக்ஞை




154.
தூரத்தை உறுதிப்படுத்தும் சமிக்ஞை

## வழிகாட்டும் சமிக்ஞை




155. இடம தூரம் காட்டுவது




156. இடம்

## இடத்தை அறிந்து கொள்ளும் சைகை




157.
பிரதேச ஆரம்பம்




158.
பிரதேச முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்குத் தொடர்தலுக்குப் பதிலாக தண்டம் விதித்தல்

| | குற்றம் | தண்டம் |
|---|---|---|
| 01. | வேகமாகச் செலுத்துதல் | Rs. 1000.00 |
| 02. | நிற்பாட்டல் | Rs. 500.00 |
| 03. | பொலிசாரின் பணிப்புரைகள் / சைகைகளை மீறுதல் | Rs. 1000.00 |
| 04. | சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் செலுத்துதல் | Rs. 2500.00 |
| 05. | 18 வயதுக்குக் குறைந்தவர் வாகனம் செலுத்துதல் | Rs. 5000.00 |
| 06. | அனுமதிப் பத்திரம் இல்லாதவரை வேலைக்கு அமர்த்துதல் | Rs. 3000.00 |
| 07. | இறைவரி அனுமதிப் பத்திரம் கொண்டு செல்லாமை | Rs. 500.00 |
| 08. | இறைவரி அனுமதிப் பத்திரம் கட்டுப்பாடுகளை மீறுதல் | Rs.1000.00 |
| 09. | சாரதியின் சைகைகள் | Rs. 500.00 |
| 10. | சாரதி இருக்க வேண்டிய முறை | Rs. 100.00 |
| 11. | முன் ஆசனத்திலுள்ள ஆட்களின் எண்ணிக்கை | Rs. 100.00 |
| 12. | ஒலி அல்லது ஒளி எச்சரிக்கைகள் | Rs. 100.00 |
| 13. | வாகனத்தைப் பின்னோக்கிச் செலுத்துதல் | Rs. 20.00 |
| 14. | மிதிப்பலகைகளில் பிரயாணம் செய்தல் | Rs. 100.00 |
| 15. | நிற்பாட்டும்போது கவனிக்க வேண்டிய விதிகள் | Rs. 500.00 |
| 16. | மேலதிகமாகப் பிரயாணிகளை ஏற்றுதல் | Rs. 150.00 |
| 17. | லொறியில் செல்லக்கூடிய ஆட்கள் | Rs. 150.00 |
| 18. | விளம்பரங்களை விநியோகித்தல் | Rs. 100.00 |
| 19. | அடையாளம் காணக்கூடிய இலக்கத்தகடு | Rs. 500.00 |
| 20. | இலக்கத் தகட்டின் வடிவம் | Rs. 100.00 |
| 21. | பெற்றோல் நிரப்பும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் | Rs. 20.00 |
| 22. | பாதுகாப்புத் தலைக் கவசத்தை அணியத் தவறியமை | Rs. 500.00 |
| 23. | வீதி விதிகள் | |
| 01. | வீதியில் இடது பக்கத்தால் போகத் தவறுதல் | Rs. 500.00 |
| 02. | ஒட்டப்பாதை மாறித் தடை செய்தல் | Rs. 500.00 |
| 03. | வாகனங்களை முன் செல்லத் தடை செய்தல் | Rs. 500.00 |
| 04. | தெளிவான பார்வையின்றி முந்திச் செல்லல் | Rs. 500.00 |
| 05. | தவறான முறையில் முந்திச் செல்லல் | Rs. 500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| *06.* | வாகனங்களை நேரே செல்லும்போது அல்லது முந்திச் செல்லும் போது | Rs. 500.00 |
| *07.* | வீதியைக் கடக்கும் போது தடை செய்தல் | Rs. 500.00 |
| *08.* | வீதியினுள் நுழையும்போது தடை செய்தல் | Rs. 500.00 |
| *09.* | ஒரு வீதியிலிருந்து மறு வீதிக்குள் நகரும் போது தடை செய்தல் | Rs. 500.00 |
| *10.* | பிரதான வீதியில் வாகனங்களைத் தடை செய்தல் | Rs. 500.00 |
| *11.* | வலது பக்கத்து வாகனங்களுக்கு இடம் கொடுக்கத் தவறுதல் | Rs. 500.00 |
| *12.* | ஒடுக்கமான வீதியில் போகும்போது வேகத்தைக் குறைத்து, பத்திரமாக செல்லுவதை அனுமதிக்கத் தவறுதல் | Rs. 500.00 |
| *13.* | இடது பக்கத்துக்குத் திரும்பும் போது இடது பக்கத்தால் போகத் தவறுதல் | Rs. 500.00 |
| *14.* | வலது பக்கத்துக்குத் திரும்பும்போது வாகனத்தை வீதியின் மத்திக்குக் கொண்டுவரத் தவறுதல் | Rs. 500.00 |
| *15.* | இறைவரி அனுமதிப்பத்திரம் மோட்டார் வாகனங்களில் கொண்டு செல்லப்படுதலும் தேவைப்படும் போது காண்பிக்கப்படுதலும் | Rs. 1000.00 |
| *16.* | இறைவரி அனுமதிப்பத்திரத்தை மீறிப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனத்தின் மீதான மட்டுப்பாடுகள் சாரதி உரிமையில்லாமற் செல்லுவதற்குள்ள தடை | Rs. 1000.00 |
| *17.* | சாரதி அனுமதிப்பத்திரமின்றி ஆளொருவரை வேலைக்கு அமர்த்துதல் | Rs. 3000.00 |
| 18. | மோட்டார் வாகனங்களைத் திருப்புதல் | Rs. 500.00 |
| *19.* | பெருவழியில் மோட்டார் வாகனங்களை நிறுத்துதல் அல்லது நிற்பாட்டி வைத்தல் | Rs. 500.00 |
| *20.* | மோட்டார் வாகனம் பெருவழியொன்றில் நிறுத்தப்படும் போது அல்லது கவனிக்காமல் விடப்படும்போது அல்லது செயலிழந்த போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் | Rs. 500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த தானம்

இரத்ததானம் அல்லது குருதிக்கொடை (blood donation) என்பது ஒருவர் தனது இரத்தத்தைப் பிறருக்குப் பயன்படுத்திக் கொள்ளும் மனப்பான்மையுடன் தானமாக வழங்குவது ஆகும். ஓர் ஆரோக்கியமான மனிதனின் உடலில் 5 முதல் 6 லீட்டர் இரத்தம் உள்ளது. இரத்ததானம் செய்பவர் ஒரு நேரத்தில் 470 ml இரத்தம் வரை கொடுக்கலாம். அவ்வாறு கொடுத்த இரத்தத்தின் அளவு இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் சாதாரண உணவிலேயே மீண்டும் உற்பத்தியாகிவிடும். 3 மாதங்களுக்கு ஒரு முறை எந்த வித பாதிப்பும் இன்றி இரத்ததானம் செய்யலாம். இரத்ததானம் செய்வதற்கு 5 - 10 நிமிடங்கள் போதும். உடலில் உள்ள ஒவ்வொரு இரத்த அணுவும் (செல்கள்) மூன்று மாத காலத்தில் தானாகவே அழிந்து மீண்டும் உற்பத்தியாகிறது. இந்த அணு உற்பத்தி என்பது உடலில் எப்போதும் நடந்து கொண்டிருக்கும் பணி. எனவே இரத்த தானம் செய்வதால் உடலுக்குப் பாதிப்போ, பலவீனமோ ஏற்பட வாய்ப்பில்லை.

## இரத்ததானத்தின் தேவைகள்

அறுவைச் சிகிச்சையின் போதும், விபத்தின் போதும், பிரசவத்தின் போதும் அல்லது ஏதாவது ஒரு வழியில் ஒருவருக்கு ஏற்படும் இரத்த இழப்பை ஈடு செய்து அவருடைய உயிரைக் காக்கும் பொருட்டு இரத்த தானம் தேவைப்படுகிறது. சிலர் தன்னார்வத்துடன் இரத்ததானம் செய்ய முன் வருகின்றனர். சிலர் சமூக சேவை அமைப்புக்களின் வழிகாட்டு தலின் பேரில் இரத்த தானம் செய்து வருகின்றனர்.

- ♥ இரத்தம் மனிதனின் வாழ்க்கையில் மிகவும் உயரிய பரிசாகும். இரத்தத்திற்கு மாற்று ஏதும் இல்லை.
- ♥ ஒவ்வொரு இரண்டு விநாடிகளுக்கும் யாரோ ஒருவருக்கு இரத்தம் தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெரும்பாலும் தேவைப்படும் பிரிவு O ஆகும்.
- ஒவ்வொரு ஆண்டும் அதிகளவானோர் புற்றுநோயால் பாதிக் கப்படுகின்றனர். இவர்களில் பலருக்கு தேவைப்படுகிறது.

## இரத்ததானம் அளிப்போர் அடையும் நன்மைகள்

- இரத்தப்பிரிவும், இரத்தத்தில் மஞ்சள் காமாலை, மலேரியா, பால்வினை நோய் மற்றும் எய்ட்ஸ் கிருமிகள் உள்ளதா என்றும் பரிசோதிக்கப்பட்டு இரத்த தானமளிப்பவர்களுக்குத் தெரிவிக்கப்படு கிறது.
- இரத்ததானம் செய்வது பிறர்நலன் காப்பதற்கு மட்டு மன்றி தன்நலன் காப்பதற்கும் உதவும்.
- இரத்ததானம் செய்வது இயற்கையாக புதிய இரத்தம் உடலில் ஏற்படுவதற்கு வாய்ப்பளிக்கிறது.
- தற்போதைய பல்வேறு ஆய்வுகளில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்பவர்களுக்கு மாரடைப்பு (Heart attack) ஏற்படும் வாய்ப்பு குறைவு என்று கண்டறியப் பட்டுள்ளது.
- ஹிமோகுளோபின் (Heamoglobin) அளவினை கட்டுப் படுத்தவும் சமச்சீராகப் பராமரிக்கவும் இரத்ததானம் பயன்படுகிறது.
- இரத்ததானம் செய்வதன் மூலம் இரத்த அழுத்தம் (Blood pressure) சீராகப் பராமரிக்கப்படுகின்றது. இதன் மூலம் பலவிதமான நோய்கள் தவிர்க்கப்படுகின்றது.
- இரத்ததானம் செய்வதன் மூலம் எந்த பின்விளைவு களும் ஏற்படாது. மயக்கம் ஏற்படுதல் போன்றவை அனைத்தும் பயத்தினாலேயே என்பது தான் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்தானம் மனிதநேய வெளிப்பாட்டின் மிகச் சிறந்த அடையாளம்**

**ஒரு முறை செய்யும் இரத்தானத்தின் மூலம் நான்கு உயிர்கள் காக்கப்படுகின்றன.**

**இரத்தானம் பிற உயிர்களைக் காக்க இறைவன்மனிதனுக்கு வழங்கியுள்ள ஓர் ஒப்புயர்வற்ற அரியவாய்ப்பு.**

**இரத்தானம் செய்வதால் நம் உடல் ஆரோக்கியம் மேம்படும். எந்த தீங்கும் ஏற்படாது.**

**இரத்ததானம் செய்த 48 மணி நேரத்தில் நாம் தானமாக அளித்த இரத்தம் மீண்டும் உற்பத்தியாகிவிடுகிறது.**

## யார் இரத்தானம் செய்யலாம்?

- *18 முதல் 60 வயதுடைய, உடல் ஆரோக்கியமுள்ள, நல்ல பழக்க வழக்கங்களுடைய ஆண் - பெண் இருபாலரும் இரத்தானம் செய்யலாம்*
- *உடல் எடை 45 கிலோ அதற்கு மேலும் உள்ளவர்கள்.*
- *இரத்தத்தில் ஹிமோகுளோபின் அளவு 12.5* gm % *இருக்க வேண்டும்.*
- *இரத்த அழுத்தம்* (Bloosd Pressure) 100/50 mmHg *மற்றும்* 180/100mmHg *இருத்தல் அவசியம்*
- *ஒவ்வொரு தடவையும் இரத்ததானம் செய்யும் கொடை யாளர்கள் 3 மாத இடைவெளியில் தானம் செய்யலாம்.*

Save a life
Give Blood



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மொழி அரசு
**வாரியார் சுவாமிகள்**

# அருள்வாக்கு

பார்த்துக் கெட்டது பிள்ளை
பார்க்காது கெட்டது பயிர்
இட்டுக் கெட்டது காது
இடாது கெட்டது கண்
கேட்டுக் கெட்டது குடும்பம்
கேளாது கெட்டது கடன்
உண்டு கெட்டது வயிறு
உண்ணாது கெட்டது உறவு
கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்
காதுக்கு அணிகலம் நல்ல கேள்வி
வாக்குக்கு அணிகலம் சத்தியம்
மனத்திற்கு அணிகலம் தியானம்
கரத்திற்கு அணிகலம் தான தருமம்
தான் உய்ய ஆன்றோர்க்குத் தருவது தானம்
பிறர் உய்ய வறியோர்க்குத் தருவது தருமம்
மக்கள் இல்லாத வீடு பாழானது
நண்பர்கள் இல்லாத திசை பாழானது
கல்வி ஞானம் இல்லாதவனுடைய உள்ளம் பாழானது
உடன் பிறப்பு இல்லாதவனுடைய உடம்பு பாழானது
வறுமையுள்ளவனுக்கு எல்லாம் பாழ்
நிதி உள்ளவனுக்கு நீதி இருக்க வேண்டும்
தனம் உள்ளவனுக்கு தானம் இருக்க வேண்டும்
மனம் உள்ளவனுக்கு மானம் இருக்க வேண்டும்
மரணம் நிச்சயம் உண்டென்பது நம் எல்லோருக்கும் தெரியும்
ஆனால் அது நமக்கில்லை என்று வாழ்கிறோம்
ஆரோக்கியம் பெறவேண்டி ஆதித்தனை வணங்கு
செல்வம் பெறவேண்டி முருகனை வணங்கு
சுகம் பெற வேண்டி திருமாலை வணங்கு
ஆற்றல் பெறவேண்டி அம்பிகையை வணங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்...



இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்த எங்கள் குடும்பத் தலைவி **திருமதி நவரத்தினம் மகாலட்சுமி** அவர்கள் 20.05.2015 அன்று சிவபதம் அடைந்த செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும், தபால்மூலமும் ஆறுதல் கூறியோர்க்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும், இறுதியாத் திரையிலும் கலந்து கொண்டோர்க்கும், கண்ணீர் அஞ்சலி, கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள் வெளியிட்டோர்க்கும், மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தியோருக்கும், எமக்குப் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், பணியாளர்கள், வழிநடாத்திய பெரியோர்கள், கிரியைகளை நடாத்திய சைவக் குருமாருக்கும் மற்றும் இம்மலரை வெளியிட உதவிய கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் இன்னும் மற்றைய பல்வேறு உதவிகளைப் புரிந்தோர்க்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**நன்றி**

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




* அமரர்களைக் குறிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு



தூய்மையாக இருப்பதும்

மற்றவர்களிற்கு நன்மை

செய்வதும் தான் எல்லா

வழிபாடுகளினதும் சாரமாகும்.

தீமை செய்பவன் தனக்கும்

மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்,

நன்மை செய்பவன் தனக்கும்

பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.

உடலும் உள்ளமும் தூய்மையின்றி

கோயிலுக்கு போவதும் இறைவனை

வழிபடுவதும் பயனற்றதாகும்.

நேர்மையுடனும் தைரியமாகவும்

பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்

இறைவனை அடைவது உறுதி.

"நன்னெறியே இறைவணக்கம்"

- சுவாமி விவேகானந்தர் -

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org